# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 07 வியாழக்கிழமை 20.06.2024 கதிர் 279







# இலங்கைக்கு வந்தார் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்து முக்கிய கலந்துரையாடல்!

## இந்திய உதவித் திட்டங்கள் மெய்நிகர் ஊடாகக் கையளிப்பு

**இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 106 வீடுகளுக்கான நினைவுப் படிகங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் டொக்டர் ஜெய்சங்கர் இன்று கூட்டாக மெய்நிகர் ஊடாகத் திறந்து வைத்துள்ளனர்.**

**உத்தியோகபூர்வப் பயணமாக இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டொக்டர் எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்த பின்னர் இவர்கள் இருவரும் இணைந்து இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.**

2➤





## அரசமைப்பு ஓட்டைகளைக் காரணம் காட்டி தேர்தல்களுடன் விளையாட முற்படாதீர்கள்!

### இரு தேர்தல்களையும் ரணில் நடத்தியே ஆக வேண்டும் என மஹிந்த வலியுறுத்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலையும், அடுத்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தியே ஆக வேண்டும்என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமும் 5 வருடங்கள். எனவே, அரசமைப்பில் உள்ள ஓட்டைகளைக் காரணம் காட்டி மக்கள் ஆணை வழங்கும் தேர்தல்களுடன் எவரும் விளையாடக்கூடாது. தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டும்.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே தீர வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க மொட்டுக் கட்சி அனுமதி வழங்காது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணிலுக்கு அழுத்தம் எதனையும் வழங்கவில்லை. ஊடகங்களில் வரும் செய்திகள் எல்லாம் உண்மை இல்லை. இன்று பெரும்பாலான ஊடகங்கள் போலிச் செய்திகளையே வெளியிடுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலையும், அடுத்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலையும்

2➤

## இந்திய முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு ஆதரவளிக்க நாம் ஒன்றாக வேண்டும்!

### தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி



இந்திய முறையிலான அரசியல்தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு ஆதரவளிக்க ஒன்றாக வேண்டும் எனவும், அதற்காக எந்தத் தரப்புடனும் இணைந்து செயற்பட தயாராக உள்ளதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிற்கு வந்து 13 ஆம் திருத்தம்தீர்வு என கூறும்போது, தெற்கில் இலங்கை எரியும் என்கிறார்கள். 13 ஆம் திருத்தம், சமஸ்டி எனக் கூறுவதால் தெற்கில் எதிர்ப்புகள் அதிகரிக்கும் என்பதை அறியாத அரசியல் தலைவர்களாக உள்ளனர்.

2➤



## சட்டமா அதிபரின் பதவி நீடிப்பு நிராகரிக்கப்பட்டமை ஜனநாயக நிறுவனங்களுக்கு கிடைத்த வெற்றியாகும்!

### பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் எம்.பி. தெரிவிப்பு

சட்டமா அதிபர் சஞ்சே ராஜரத்தினத்தின் சேவை நீடிப்பு அரசியலமைப்பு சபையால் நிராகரிக்கப்பட்டமை ஜனநாயக நிறுவனங்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சட்டமா அதிபர் பதவியும், சட்டமா அதிபர் திணைக்களமும் அரசியல்மயமாக்கப்படும் அபாயம் நீங்கியுள்ளது. இதேவேளை, ஜனாதிபதி தேர்தலொன்று நடைபெற

2➤

## நயினாதீவு நாகபூசணி அம்மன் இரதோற்சவப் பெருவிழா இன்று

நாகபூசணி அம்மன் கோவில் இரதோற்சவப் பெருவிழா இன்றையதினம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

காலை வசந்த மண்டபப் பூசைகளுடன் ஆரம்பமாகி, நாகபூசணி அம்மனுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று, வசந்த மண்டபத்திலே விநாயகப் பெருமான், முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோருக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று மூன்று மூர்த்திகளும்

2➤



## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்தியே ஆக வேண்டும். ஜனாதிபதி மேற்படி வாக்குறுதிகளை மீறமாட்டார் என்று நம்புகின்றோம்" - என்றார். (05)

## சட்டமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறுகிய காலமே உள்ள சூழ்நிலையில் சட்டமா அதிபரின் பதவிக் காலத்தை நீடிக்க எடுத்த முயற்சியானது முக்கிய கேள்விக்குறியை எழுப்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் எந்தவொரு கால கட்டத்திலும் சட்டமா அதிபர் பதவிக்கான சேவை நீடிப்பு வழங்கப்பட்டதில்லை என சுட்டிக்காட்டிய பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், இத்தகைய முயற்சியினால் திணைக்களத்தின் ஏனைய அதிகாரிகளுக்கு ஏற்படுகின்ற இழிவை, பாதிப்பை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது எனவும், திறமை மற்றும் மூப்பு அடைப்படையில் பதவி உயர்வுகளை பெற வேண்டிய அதிகாரிகள் அந்த தேவைகளுக்காக அரசியல்வாதிளுடன் நெருங்கிப் பழக வேண்டிய தேவை ஏற்படுவதை அரசியலமைப்பு சபையின் தீர்மானம் சிறப்பாக தடுத்துள்ளது எனவும் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார். சிவில் சமூகத்தின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியலமைப்புச் சபை எடுத்த தீர்மானத்திற்கு அனைவரும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-62)

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், கொழும்பு, திருகோணமலை ஆகிய நகர்களிலுள்ள மாதிரிக் கிராமங்களிலும் 24 வீடுகள் மெய்நிகர் ஊடாகப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

அத்துடன் 6 மில்லியன் டொலர் இந்திய நிதியுதவியுடன் இலங்கையில் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதைக் குறிக்கும் நினைவுப் படிகமும் மெய்நிகர் ஊடாகத் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கொழும்பில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் ஒரு மையம், ஹம்பாந்தோட்டையில் துணை மையம், காலி, அறுகம்பே, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்லாறு, பருத்தித்துறை, மொல்லிக்குளம் ஆகிய பிரதேசங்களின் ஆள்ளில்லா கட்டுப்பாட்டு மையங்களும் அடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று காலை இலங்கை வந்தடைந்திருந்தார்.

இதன்போது கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவரை, இலங்கையின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றிருந்தனர்.

அண்மையில் தேர்தல் முடிவுகள் வெளியாகி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கீழ் தற்போதைய அரசாங்கம் அமைந்த பிறகு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டொக்டர் எஸ்.ஜெய்சங்கரின் முதல் இலங்கை விஜயம் இதுவாகும். (04)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று நாடாளுமன்றத்தில் உள்ளவர்களில் சிலர் தூக்கில் தொங்க வேண்டியவர்களும், சிறைச்சாலையில் இருக்க வேண்டியவர்களுமாக உள்ளனர். முள்ளிவாய்க்காலில் அப்பாவி உயிர்களை காப்பாற்ற வேண்டியவர்கள், இன்று நினைவேந்தல் செய்கின்றனர்.

கடந்த 4 தடவைகளில் நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் சட்டவிரோதமானவர்கள். நான் எல்லோரையும் கூறவில்லை.

நாடாளுமன்றம் இறைமையை இழந்து பல ஆண்டுகளாகிவிட்டது. வழக்கு தொடர்ந்தாலும் அதை எதிர் கொள்ளத் தயாராகவே இதைக் கூறுகிறேன். நாடாளுமன்றம் இறைமை இழந்துள்ளது. அங்கு இருப்பவர்களில் சிலர் சிறையில் இருக்க வேண்டியவர்கள்.

அரசியலில் அனுபவம் இல்லாதவர்களால் பல சந்தர்ப்பங்கள் கைநழுவிப் போயுள்ளன. தமிழ், சிங்கள அரசியல்வாதிகளில் நான் மூத்த அனுபவம் உள்ள அரசியல்வாதி. இன்று பேசப்படும் அரசியல் தீர்வுகள் தீர்வாகாது.

இந்திய முறையிலான அரசியல் தீர்வே பொருத்தமானது. அந்தத் தீர்வுத்திட்டம் என்னால் எடுத்து செல்லப்பட்ட போது ஜனாதிபதி, அமைச்சர்கள், பௌத்த மதத் தலைவர்கள், சிங்களத் தலைவர்கள், சிங்கள மக்களும் மற்றும் சர்வேதேசமும் ஏற்றுக் கொண்டது.

என்னைப் பொறுத்த வரையில், அந்தத் தீர்வுத் திட்டத்தை யாரும் எதிர்க்க மாட்டார்கள். பொருத்தமான தீர்வும் அதுவாக இருக்கும்.

இன்று முக்கிய காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல், இடம்பெறவுள்ளது.

இந்த தீர்வுத் திட்டத்தை வெளிப்படையாக அறிவித்து போட்டியிடும் வேட்பாளரை ஒன்றாக சேர்ந்து ஆதரிப்போம். அதற்காக எந்த தரப்பாக இருந்தாலும் இணைந்து செயற்பட தயாராக இருக்கிறேன். மற்றபடி அவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்கு எனது ஒத்துழைப்பு இருக்காது.

விக்னேஸ்வரன் நீதிபதியாக இருந்த போது பேச வேண்டிய சந்தர்ப்பங்களை விட்டுவிட்டார். நானே அழிவுகளிலிருந்து காப்பாற்ற வாருங்கள், என அழைத்தும் எதுவும் செய்யவில்லை.

அப்போது அமைதியாக இருந்தவர், இன்று ஓய்வூதியத்தை பெற்றுக்கொண்டு ஏதோவெல்லாம் பேசுகிறார். அவர் பேசுவது அரசியலுக்கு இன்று பயனுள்ளதாக இல்லை. அவர் என்னுடைய நண்பராக இருந்தாலும், இதனைச் சொல்ல வேண்டியதாக உள்ளது.

இன்று பொது வேட்பாளர் எனப் பேசப்படுவது வாக்குச் சிதைவுகளை ஏற்படுத்துமேயன்றி வேறு எதையும் பெற்றுத்தராது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (02)

## நயினாதீவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்வீதி, வெளி வீதி எழுந்தருளி தனித்தனி தேரிலே ஏறி முத்தேர் பவனியாக இரதோற்சவம் இடம்பெற்றது.

16 தினங்களை கொண்ட ஆலய மஹோற்சவம் கடந்த 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் இன்று இரதோற்சவம் இடம்பெற்றது. நாளைக் காலை தீர்த்தோற்சவமும் மாலையில் திருவூஞ்சலும் நடைபெற உள்ளன.

நாளை மறுதினம் 22ஆம் திகதி சனிக்கிழமை இரவு பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தெப்போற்சவம் நடைபெறவுள்ளன. (01)

# நல்ல தண்ணி நகரில் காட்டுப் பன்றிகளால் அப்பகுதி வாழ் மக்கள் பெரும் அச்சத்தில்

இவ்வருடம் சிவனொளிபாதமலை யாத்திரை பருவ காலம் நிறைவடைந்துள்ள நிலையில், நல்லதண்ணி நகரில் பகல் வேளைகளில் சுற்றித்திரியும் காட்டுப் பன்றிகளினால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெண்கள் அச்சமடைந்துள்ளனர். இந்த காட்டுப் பன்றிகள் கூட்டமாக இரவு மற்றும் பகலில் உணவு தேடி நகர் மற்றும் நல்லதண்ணி கிராமத்தின் வீடுகளை நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நகரிலுள்ள சிலர் இந்த பன்றி கூட்டத்திற்கு உணவளித்து பழக்கப்படுத்தியுள்ளதால், அவை தினமும் இங்கு வந்து செல்வது வழக்கமாகிவிட்டது. சில சமயங்களில் பன்றிகளுக்கு பயந்து பிள்ளைகள் பாடசாலைக்கும் செல்லாமல் வீடு திரும்புவதுமுண்டு என இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கன்றுகள் அடங்கலாக சுமார் 20 பன்றிகள் இந்தக் கூட்டத்தில் உள்ளதாக கருதப்படுகின்றது. (ரென-63)

# குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் 8750 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டமை தேர்தல் சட்டங்களை மீறுவதாகும்

**எதிர்க்கட்சி பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல**

*ஜனாதிபதித் தேர்தல் மிகவும் நெருங்கி வரும் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எனக்கூறி குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் 8750 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டமை தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும், எனவே அந்த பணத்தை செலவு செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில், "முன்மொழியப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டு தொகை 8750 கோடிகள். இது தேர்தல் காலம். ஜனாதிபதித் தேர்தலுக்கு மிக நெருக்கமான காலகட்டம். இப்படிப்பட்ட நேரத்தில் இதுபோன்ற அபிவிருத்திகளை செய்வது தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும். தேர்தல் தொடங்குமுன், தேர்தலை பாதிக்கும் வகையில் இவ்வாறன செயல்களில் ஈடுபட்டால், அதில் தலையிட தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.*

*இந்தப் பணத்தை பகிர்ந்து கொள்ளும் போது, மதகுகளை யார் கட்டப்போகிறார்கள்? வீதிகளை அமைக்கப் போவது யார்? இதில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் எம்.பி.க்கள் தான் இதில் சம்பந்தப்படுவார்கள். இது தேர்தலை நேரடியாக பாதிக்கும். பண பட்டுவாடா என்பது தேர்தல் சட்டங்களை முற்றிலும் மீறுவதாகும். இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணைக்குழு தலையிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்" - என்றார்.*

*(ரென-65)*

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# மாவடிப்பள்ளியில் கீறல் இதழ் வெளியீடும் கலந்துரையாடலும்

(எம் எப் நவாஸ்)

கீறல் இதழ் வெளியீடும் கலந்துரையாடலும் அண்மையில் மாவடிப்பள்ளி (சம்மாந்துறை) அஸ்ரஃப் மகாவித்தியாலயத்தின் திறந்த வெளியில் ரம்மியமான சூழலில் நடைபெற்றது.

முதன்மைப் பிரதியை உலகக் கவிஞர் சோலைக்கிளி அஸிஸ் எம் பாயிஸிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் எஸ். எம். அய்யூப், சமுர்த்தி முகாமையாளர் எஸ்.எல். அப்துல் அஸீஸ், சிறிலங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசன் அக்கரைப்பற்றுக்கிளை முகாமையாளர் எஸ். எல். அன்வர், அஷ்ஷெய்க் நிலாம் (நளீமி), அஷ்ஷெய்க் றிஸான் சுபைதீன் (நளீமி), விவசாயப் போதனாசிரியர் கவிஞர் முர்ஷிதா ஷிரீன், கவிஞர் ஜமீல், கவிஞர் முனாஸ், கவிஞர்பானு ஜிஃப்ரி, புத்தக வடிவமைப்பாளர் ஸாஜித் அலி, எம்.எல்.ரீ. அலுவலர் சகோதரர் ஸாகீர், முதுமாணி எம்.எல் இஸ்ஹாக் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். கீறல் கலை இலக்கிய சஞ்சிகைக்கு பரந்து பட்ட வாசகர் வட்டம் ஒன்றைத் தோற்றுவிப்பது தொடர்பாக விரிவான கருத்துப் பரிமாறல் இதன்போது இடம் பெற்றது.





# கொழும்பு சைவ மங்கையர் கழகத்தின் மண்டபத்தில் ஆய்வரங்குடன் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

கொழும்பு சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நாளை ஜூன் 21 மற்றும் 22, 23 களில் நடைபெறவுள்ள ஆய்வரங்கு, புத்தக கண்காட்சி அரங்கில் தமிழகத்திலிருந்து பேச்சாளர், கதைசொல்லி பவா செல்லத்துரை, எழுத்தாளர் பெருமாள் முருகன், கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஸ்ணா, உலகறிந்த தமிழாய்வாளர் முனைவர் இரா வேங்கடாசலபதி, பதிப்பாளர் கண்ணன் சுந்தரம் உட்பட பலர் பங்கேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மூத்த கல்வியலாளர்களுடன், இளம் பல்கலைக்கழக ஆசிரியர்களும், ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும் தமது ஆய்வுகளையும் கருத்துக்களையும் முன்வைக்க உள்ளனர். பங்குபற்றுனர்களுடனான விரிவான கலந்துரையாடலும் இடம்பெற உள்ளது.

புத்தக கண்காட்சி, 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி, 23 ஆம் திகதி ஞாயிறு இரவு வரை இடம்பெற உள்ளது. இந்த புத்தக கண்காட்சியில் தமிழகப் பதிப்பகங்களான பாரதி புத்தகாலயம், நியூசெஞ்சரி புக் ஹவுஸ், காலச்சுவடு, டிஸ்கவரி, எதிர், நன்னூல், சிக் சென்த் பதிப்பகங்கள் உட்பட, தஞ்ஞாவூர் பல்கலைக்கழகமும், லண்டன் சமூகம் இயல் பதிப்பகமும் கலந்து கொள்கின்றன. இலங்கையிலுள்ள முன்னணிப் பதிப்பகங்களும், புத்தக நிலையங்களின் விற்பனைக் கூடங்களும் இடம்பெறவுள்ளதுடன், தமிழ், ஆங்கில சிறுவர் பதிப்பகங்களும் கலந்து கொள்ளவுள்ளன.

ஈழத்து தமிழ்மொழி எழுத்தாளர்களுக்கான தனி அரங்கும் விசேடமாக அமைக்கப்படவுள்ளது. இந்திய நூல்களை குறைந்த நாணய மாற்று விலையில் இங்கு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வாய்ப்பினை இலங்கை மாணவர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். பாடசாலை, பல்கலைக்கழக நூலகங்கள் தொடக்கம், உள்ளூராட்சி நூலகங்கள் தமக்கான நூல்களை பெற்றுக் கொள்ளவும் இந்த நிகழ்வு பயன் மிக்கதாக அமையும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்களான மானுடம் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (04)







## பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த திருமலை ஸாஹிரா மாணவன் ஸலாமாவிற்கு வரவேற்பு நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை, இந்தியாவுக்கு இடையிலான பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக்கடந்த இலங்கையின் முதலாவது இஸ்லாமியர் என்கிற சிறப்புச்சாதனையை தனதாக்கிக் கொண்ட திருகோணமலை ஸாஹிராக் கல்லூரி மாணவன் ஹஸன் ஸலாமாவிற்கு புல்மோட்டையில் நேற்று (19) மகத்தான வரவேற்பு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்வரவேற்பு நிகழ்வில் பெரும் தொகையில் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# தேசிய அணியின் ஒப்பந்தத்தைத் தவிர்த்த வில்லியம்சன் வெளிநாட்டு லீக் தொடர்களில் பங்கேற்பதே காரணமாம்!



நியூசிலாந்து கிரிக்கெட் சபை 2024-25 பருவத்திற்காக வழங்கவிருந்த வீரர்கள் ஒப்பந்தத்தினை மேற்கொள்வதை அந்த நாட்டு அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான கேன் வில்லியம்சன் தவிர்த்திருக்கிறார்.

நியூசிலாந்து அணியின் அடுத்த கோடை காலத்தில் வெளிநாட்டு லீக் தொடர்களில் ஆட விருப்பம் கொண்டிருக்கும் கேன் வில்லியம்சன், இதனைக் காரணம் காட்டியே நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் வீரர்கள் ஒப்பந்தத்தினை தவிர்த்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

அதேநேரம் 33 வயது நிரம்பிய கேன் வில்லியம்சன் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் நியூசிலாந்து அணியினை தலைவராக வழிநடாத்தி வந்த நிலையில் குறிப்பிட்ட தலைவர் பதவியினையும் இராஜினமா செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தான் குறிப்பிட்ட காலப்பகுதி தவிர்த்து நியூசிலாந்து கிரிக்கெட் அணியினை பிரதிநிதித்துவம் செய்ய எதிர்பார்ப்பதாகவும், தேசிய அணியில் விளையாடுவதற்கே முக்கியத்துவம் வழங்குவேன் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

கேன் வில்லியம்சன் மூலம் வழிநடாத்தப்பட்ட நியூசிலாந்து அணியானது இம்முறைக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் முதல் சுற்றோடு வெளியேறியிருந்தது.

கேன் வில்லியம்சன் தவிர நியூசிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளரான லோக்கி பெர்குஸனும், நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தினை தவிர்த்திருப்பதாக சில செய்தி வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

சர்வதேசப் போட்டிகளில் விளையாடாத சந்தர்ப்பங்களில் நியூசிலாந்தின் உள்நாட்டுத் தொடரான சுப்பர் ஸ்மாஷில் விளையாடவேண்டும் என்பது அந்த நாட்டுக் கிரிக்கெட் வீரர்கள் ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனையாகும். ஆயினும், வெளிநாட்டு லீக்கில் விளையாடவிருப்பதால் அந்தத் தொடரில் பங்கேற்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போகின்றமையே கேன் வில்லியம்சன் ஒப்பந்தத்தைத் தவிர்த்தமைக்கான காரணம் என்று நம்பப்படுகிறது.

(04)



# ரி–20 உலகக் கிண்ணத் தொடர் – சூப்பர் 8 சுற்று முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி!

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் 8 சுற்றின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றியீட்டியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் அன்டிகுவாவில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் தென்னாபிரிக்க - அமெரிக்க அணிகள் மோதியிருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. குயின்ரன் டி கொக் 74 ஓட்டங்களையும், மார்க்ரம் 46 ஓட்டங்களையும், ஹென்ரிச் கிளாசென் 36 ஓட்டங்களையும் எடுத்தனர். அமெரிக்க அணியின் நெத்ராவல்கர், ஹர்மீத் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தனர்.

195 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய அமெரிக்க அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 176 ஓட்டங்களையே பெற, தென்னாபிரிக்கா அணி 18 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது. அமெரிக்க அணியின் அண்ட்ரிஸ் கௌஸ் ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களையும், ஹர்மீத் சிங் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். தென்னாபிரிக்கா அணியின் ரபாடா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்கா அணியின் குயின்ரன் டி கொக் தெரிவு செய்யப்பட்டார்.

# கையடக்கத் தொலைபேசிகளை அத்தியாவசிய பொருட்களின் பட்டியலில் சேர்க்கவேண்டும்!

**தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் சங்கத்தலைவர் வேண்டுகோள்**



சந்தையில் கையடக்கத் தொலைபேசிகளின் விலை தாக்குப் பிடிக்க முடியாத வகையில் உயர்ந்துள்ளதாகவும், கையடக்கத் தொலைபேசியையும் அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனவும் அகில இலங்கை தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் சங்கத்தின் தலைவர் இந்திரஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளின் விலை 300 முதல் 400 வீதம் வரை அதிகரித்துள்ளதாகவும் ஆனால், 30 முதல் 35 வீதம் வரை மட்டுமே விலை குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், “மொபைல் போனின் விலை போதியளவில் குறைக்கப்படுவதாக இல்லை. ஆட்சியாளர்கள் இதனைக் கவனிக்க வேண்டும். மொபைல் போன்களின் விலையைக் குறைக்க பெருமளவில் வழிகள் உள்ளன. இருப்பினும் மொபைல் போன்களின் விலை அதிகரித்து வருவதால், நுகர்வோர் அவற்றை வாங்குவதை நிராகரிக்கின்றனர். எனவே, அத்தியாவசிய சேவைகளின் பட்டியலில் மொபைல் போன்களையும் சேர்க்குமாறு ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்” என்றார். (ரென-61)

# ரி–20 உலகக் கிண்ண – சூப்பர் 8 சுற்று மே.இ.தீவுகளை வீழ்த்தியது இங்கிலாந்து!



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் 8 சுற்றில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து அணி அபாரமான வெற்றியைப் பெற்றுள்ளது. மேற்கிந்தியத் தீவுகளின் சென்ட் லூசியாவில் இன்று நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஜோன்சன் சார்ல்ஸ் 38 ஓட்டங்களையும், நிக்கலஸ் பூரன், ரோவ்மன் பௌல் ஆகியோர் தலா 36 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

181 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து அணி 17.3 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கையடைந்தது. பில் சோல்ட் , ஜோனி பெயஸ்ட்ரோ இருவரும் ஆட்டமிழக்காது முறையே 87, 48 ஓட்டங்களைப் பெற, இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டியது. போட்டியின் ஆட்ட நாயகனாக பில் சோல்ட் தெரிவு செய்யப்பட்டார். (04)



# பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உள சுகாதாரக் குழுவின் கூட்டம் இன்று

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உள சுகாதார குழுக் கூட்டம் இன்று உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு,பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமை மீறல்,உளவளசார் நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் சம்மந்தமாக துறைசார் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் உள நல வைத்திய நிபுணர் டொக்டர் கசூன் கடுவல, நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் நளீர், சமூக சேவை பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி ஏ.யு.பசீல், உளவளதுனை உத்தியோகத்தர் கே.தயாளினி, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம் ஹறீமா, ஏ.ஜே.குறைசா, பொலிஸ் உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொது சுகாதார அதிகாரி,வலயக் கல்வி பணிமனை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வறுமைக்குட்பட்ட குடும்பங்களில் இரட்டைக் குழந்தை பெற்றெடுத்த குடும்பத்திற்கு வாழ்வாதார உதவிக்கான காசோலையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

# நாவிதன்வெளியில் மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு சமாதான நீதவான் நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (19) பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரனின் வழிகாட்டலுக்கு அமைய மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.எம். அன்பாஸ் ஒருங்கிணைப்பில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது, மத்தியஸ்த சபை உறுப்பினர்களாக சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றும் உறுப்பினர்களை அவர்களது நன்னடத்தை மற்றும் சமூக சேவை போன்றவற்றை கருத்தில் கொண்டு, அவர்களை சமாதான நீதவாங்களாக உள்வாங்கும் நீதி அமைச்சின் திட்டத்திற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட ஏழு உறுப்பினர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிர்வாக உத்தியோகத்தர், சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ் சிவா, கிராம நிர்வாகிகள் இந்திரஜித் முகாமைத்து உத்தியோகத்தர்கள், மத்திய அரச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.8

# கிழக்கு சமூக அபிவிருத்தி சங்கத்தால் மகளிர் அரபுக் கல்லூரிக்கு உதவி



(எம்.எம்.ஜெஸ்மின்)

கிழக்கு சமூக அபிவிருத்தி சங்கமானது சம்மாந்துறையில் 50க்கும் மேற்பட்ட மாணவிகள் கல்வி பயிலும் அரபுக் கல்லூரி ஒன்றுக்கு உதவும் திட்டமொன்றினை அமுல்படுத்தியுள்ளது.

இக்கல்லூரியில் நிலவும் அடிப்படைத் தேவைகளையும் நிலையான நீண்ட கால பயன்பாட்டு மின்சார நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்கும் உதவி புரிந்ததோடு மாதாந்த பயன்பாட்டு பற்றுச் சீட்டுகளை நிர்வகித்தல் மற்றும் செலுத்தும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது.




# தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்சு தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தின் இசைவேள்வி-2024 போட்டிகள் ஆரம்பம்



தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்சு தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் இசைவேள்வி-2024 கர்நாடக சங்கீத இசைத்திறன் போட்டிகள் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை பொண்டிப் பகுதியில் சிறப்பாக ஆரம்பமாகி இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஈகைச்சுடரினை மேஜர் விடுதலை அவர்களின் சகோதரி ஏற்றிவைத்து மவர்வணக்கம் செலுத்தினார். அகவணக்கத்தைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்ப நாள் போட்டிகளின் நடுவர்களாக, குரலிசை ஆசிரியர்.திருவாட்டி கீர்த்தனா ஆறுமுகதாசன், வீணை குரலிசை ஆசிரியர் திருவாட்டி நோயலா அன்ரன் இமானுவேல், தண்ணுமை ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை கொன்சலஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இப்போட்டிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான அதேவேளை, அதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு தினங்கள் பொண்டிப் பகுதியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

மூன்று நாட்களும் போட்டி நடைபெறும் இடம்: 8 Rue de la philosophie- 93140 Bondy. (RER / E Bondy – BUS (303) les marnaudes- Tram (4) les coquetiers)

# யாழ்ப்பாணத்தில் திடீரெனக் காணாமல்போன வயோதிபர்கள் நாடாளுமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்த சிறீதரன் எம்.பி



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வயோதிபர்கள் மிகவும் மர்மமான முறையில் காணாமல்போகும் சம்பவங்களின் பின்னணி தொடர்பில் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

“யாழ். மாவட்டத்தில் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த வயோதிபர்களும், பிரபல வர்த்தகர்களும் காரணங்களற்று திடீரெனக் காணாமல்போகும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. கடந்த ஏழு வருடங்களாக நடைபெறும் சில விடயங்களை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இத்தகைய சம்பவங்கள் வயது மூப்பினால் தன்னிச்சையாக இடம்பெறுபவை என அடையாளப்படுத்தப்படாத நிலையில், அவற்றின் பின்னணி குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பிரபல வர்த்தகரான வேலுபிள்ளை நடராசா (வயது - 63) கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில், மாதாந்த மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ளார்.

இவரின்மகனான நடராஜா குகராஜ் ஊடகவியலாளராகக் கடமையாற்றுகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு, பத்திரிகை விளம்பரம், சமூக வலைத்தளங்கள் மூலமான பதிவுகள் என ஏழு வருடங்களாகத் தேடுதல் நடந்தும் எந்த முடிவும் கிட்டவில்லை.

அதேபோல் யாழ். புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி யோகம்பா சோபிநாதன் (வயது - 63) என்பவர் ஆறு மாதங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் காணாமல்போயுள்ளார். இவர் எங்கே என்பது இதுவரை தெரியாது.

யாழ். புங்குடுதீவு, மடத்துவெளியைச் சேர்ந்த பிரபல கோடீஸ்வர வர்த்தகரும், வர்த்தகத்துறை சார்ந்து இலங்கை அரசால் தேசமான்ய விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டவரும், புங்குடுதீவு மக்களால் அதிகம் அறியப்பட்டவருமான வைத்திலிங்கம் கனகலிங்கம் (வயது - 82) 2024 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி மதியவேளை, அவரின் வீட்டின் முன்பாக இருந்தவேளை திடீரெனக் காணாமல் போயுள்ளார்.

பிறிதொருவரின் உதவியற்று நடந்து செல்லவோ அல்லது வாகனங்களில் ஏறிச் செல்லவோ முடியாத நிலையில் இருந்த அவர், திடீரென வீட்டு வாசலில் இருந்தே காணாமல் போயுள்ளமை மர்மம் நிறைந்ததாகவே உள்ளது. இதுவரை அவர் பற்றி எவ்வித தகவல்களும் இல்லை.

இவ்வாறு வயோதிபர்கள் காணாமல்போதல், இளைஞர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுதல், கைதுகள், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல் என்பன இங்கு நடக்கின்றன.

இந்த நாட்டின் நீதி, சிவில் நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி சிந்தியுங்கள்.

யாழ். மண்ணில் இந்த மூன்று வயோதிபர்களுக்கு மேலதிகமாக இன்னும்பலர் காணாமல்போயிருக்கக்கூடும். இவர்கள் பற்றிய தகவல்கள் இதுவரை தெரியவில்லை” - என்றார். (05)

# சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைப்பு விவகாரம் ஜூலை 4 ந் திகதிக்கு மூதூர் நீதிமன்றால் ஒத்திவைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர் கிழக்கு சேனையூர் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலை உடைப்பதால் தமக்கு பாதிப்புள்ளதாக கல்மலை உடைக்கும்போது எதிர்ப்பு தெரிவித்த 10 பொதுமக்கள் 11 ஆம் திகதியன்று சம்பூர் பொலிஸ ாரினால் கைது செய்யப்பட்டு 12 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர்கள் அனைவரும் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் 15 ஆம் திகதி சனிக்கிழமை விஜயம் செய்து பார்வையிட்டதுடன் குறித்த வழக்கானது இன்று மூதூர் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் விசாரணைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது

இது தொடர்பான வழக்கை மூதூர் நீதிமன்றில் சம்பூர் பொலிஸார் முன்னர் தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்கில் இரு தரப்பினரும் இன்று ஆஜராகியிருந்தனர்.

கைது செய்யப்பட்டு சொந்த பிணையில் விடுவிக்கப்பட்ட 10 நபர்களுக்கும் சார்பாக சட்டத்தரணிகளான பு.முகுந்தன், நா.மோகன், சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் தங்கமுத்து ஜயசிங்கம் ஆகியவர்கள் ஆஜராகியிருந்தனர்.

இந்த நிலையில், குறித்த வழக்கானது அடுத்தமாதம் 4 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மூதூர் நீதிமன்ற பதில் நீதவானால் மன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.












## தேர்தல் செலவீனத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் தெளிவூட்டல் கலந்துரையாடல் கிளிநொச்சியில்!

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவீனத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் தொடர்பாக வடமாகாண ரீதியிலான தெளிவூட்டல் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்கா தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் தேர்தல் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள், மேலதிக அரசாங்க அதிபர்கள், ஐந்து மாவட்டங்களின் உதவித்தேர்தல் ஆணையாளர்கள், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர், தேர்தல்கண்காணிப்பு அமைப்புக்களைச் சேர்ந்தோர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தேர்தல் தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தார். தாம் தேர்தலுக்கு எப்போதும் தயார் எனவும் அரசியலமைப்பின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தல் நடைபெற்ற நிலையில் தற்போது ஜனாதிபதி தேர்தலை நடாத்த வேண்டும்எனவும் அவர் குறிப்பிட்டார். (02)

## கால்பந்தாட்டப் போட்டியில் மாத்தளை மாவட்ட சம்பியனானது மாத்தளை ஸாஹிராக் கல்லூரி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாத்தளை மாவட்ட பாட சாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலய மட்ட 20 வயதுக்கு உட்பட்டோருக்கான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி மாத்தளை அஜ்மீர் தேசிய பாடசாலை அணிக்கும் மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலை அணிக்கும் இடையே மாத்தளை ஹிந்து தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலை அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாத்தளை மாவட்ட சம்பியனாகி மத்திய மாகாண மட்டப் போட்டிகளில் பங்கேற்கத் தெரிவாகியுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2024இல் வெளியிடப்பெற்றது.